[22nd August 1960

SRI A. VEDARATHNAM : தனி நபர்க ள்புளிய மரங்கள் வளர்க்க முன் வந்தால், தக்க உதவியளிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னூர்கள் ; என்ன உதவி, எந்த வகையில் அளிப்பார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அக்கறையுள்ள தனி நபர்கள் கோரிக்கைகள் சமர்ப்பித்தால், அவர்கள் கோரிக்கை களைப் பார்த்து, வேண்டிய உதவி அளிக்கலாம்.

SRI S. M. ANNAMALAI: கனம் அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போது, புளிய மரங்கள் நடுகிறூர்கள் என்று சொன் னூர்கள். இப்பொழுது இருக்கும் பற்றுக் குறையை அது தீர்க்குமா? வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று சொன்ன கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏன் ஒப்புக் கொள்ளவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறொரு ராஜ்யத் திலிருந்து ஏற்றுமதி செய்யக் கூடாது என்று இந்த அரசாங்கம் கேட்டால் போதாது. அந்த அரசாங்கமே கேட்க வேண்டும்.

SRI S. RAMASAMI NAIDU: உடல் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் புளி அவ்வளவு நல்லதல்ல என்று அரசாங்கம் பிரசாரம் செய்ய முன் வருவார்களா ? (சிரிப்பு)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு புளியும் தேவைதான். அதிகமாகச் சாப்பிட்டால், அது உடலைக் கெடுக்கும்.

Diploma holders in Civil and Rural Engineering

* 373 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any petition from the Diploma holders in Civil and Rural Engineering awarded by the National Council of Rural Higher Education in connection with the recognition of their Diplomas; and

(*b*) if so, the details thereof.

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Chief Engineer, Public Works Department (General), the Chief Engineer (Highways) and the Director of Technical Education, who were consulted, have submitted their reports. The matter is under the consideration of the Government.

Cattle Breeding Societies

* 374 *Q*.—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்திலுள்ள "கால்நடை வளர்ப்பு சங்கங்கள்" (Cattle Breeding Societies) மேற்பார்வைக்காக கூட் டுறவு இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறூர்களா?